(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC. NO.149/2018
**Depostitions of PW- 1 Witness for**

| Name | திரு. சுந்தர் (எ) சுந்தர்ராஜ் | Caste | |
|---|---|---|---|
| Father's name | சுந்தரபாண்டியன் | Calling | கூலி வேலை |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age. | 25 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of May- 2024.

Signature of Witness.

22.05.2024

எதிரி ஆஜர் .

**முதல் விசாரணை–**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த மாயாண்டி என்ற பிதுன்குமார், கல்யாணகுமார் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 07.06.2018 ம் தேதி காலை 08.00 மணியளவில் செண்பகத்தோப்பில் குளித்துவிட்டு நானும், பிதுன்குமார், கல்யாணக்குமார் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது டிராக்டர் ஒன்று வந்து எங்களது இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது.

2. டிராக்டரின் பதிவெண் மற்றும் ஓட்டுனர் விவரம் எனக்கு தெரியாது. பிதுன்குமார் சம்பவஇடத்திலேயே இறந்துவிட்டார். கல்யாணக்குமாருக்கு வலது கால் முட்டியிலும், தலையிலும் காயம் ஏற்பட்டது. எனக்கு வலது பக்க இடுப்பு எலும்பு முறிந்துவிட்டது மற்றும் வலது கையில் காயம் ஏற்பட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்ட எங்களை திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். என்னிடம்

காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். எனது கையில் காயம் ஏற்பட்டிருந்ததால் கைரேகை வைத்தேன். (**புகார் வாக்குமூலம் அ.சா. ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

3. கல்யாணக்குமார் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு பின்னர் சிறிது நாட்களில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.